මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01,
ශ්‍රී ලංකාව

செயலகம், கொழும்பு 01,
இலங்கை.

The Secretariat, Colombo 01,
Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: NPD/DCB/2024/GEN
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2024.04.08

அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும்,

<u>பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு வேலைத் திட்டம் - 2024</u>

மேற்படி வேலைத்திட்டம் தொடர்பாக 29.12.2023 திகதியிடப்பட்ட நிதி அமைச்சின் சுற்றறிக்கை இல. MF/02/2023 உடன் தொடர்புடையது.

02. 11.03.2024 திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் "அஸ்வசும சமூக நலப் பலன்கள் முன்மொழிவு முறைமையின் கீழ் பலன்களைப் பெறத் தகுதியுடைய வறிய மற்றும் மிகவும் ஏழ்மையான குடும்பங்களை வலுவூட்டும் வேலைத் திட்டம்" என்ற தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்துடன் தொடர்புடைய முடிவின் பிரகாரம், மேலே சுற்றறிக்கை இலக்கம் 2.14 இன் கீழ் தகுதியான பலன்கள், அஸ்வசும வேலைத் திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளில், வலுவூட்டும் வேலைத்திட்டத்திற்கு (Empowerment Programme) தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு மாத்திரமே வழங்கப்பட வேண்டும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வலுவூட்டும் வேலைத்திட்டம் சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படுவதுடன் அத்திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்கள் தொடர்பில் இனங்காணப்பட்ட வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மாத்திரம் தேவையான வசதிகளை வழங்க வேண்டும்.

03. மேலும், வலுவூட்டலிற்கு பொருத்தமான தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பெயர்ப் பட்டியல் சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திடம் முறைப்படி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

ஒப்பம்:/ கே. எம். மஹிந்த சிறிவர்தன
செயலாளர்

பிரதிகள்:

1. ஜனாதிபதியின் செயலாளர் - தயவுடன் தகவலிற்காக
2. செயலாளர், பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - தயவுடன் தகவலிற்காக
3. செயலாளர், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு - தயவுடன் தகவலிற்காக மற்றும் தே.ந
4. பணிப்பாளர் நாயகம், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை திணைக்களம் - தயவுடன் தகவலிற்காக
5. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவு திட்டத் திணைக்களம் - தயவுடன் தகவலிற்காக
6. பணிப்பாளர் நாயகம், சமூர்தி அபிவிருத்தித் திணைக்களம் - தயவுடன் தகவலிற்காக மற்றும் தே.ந
7. அனைத்து மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்கள் - தயவுடன் தகவலிற்காக மற்றும் தே.ந